6. முன்னுரை

6.1. காட்டு வளங்கள் அழிப்பு

6.2. வனங்கள் அழிவுக்கான காரணங்கள்

6.2.1. மக்கள் தொகை பெருக்கம்

6.2.2. இயற்கைக் காரணங்கள்

6.2.3. வளர்ச்சித் திட்டங்களும் வன அழிப்பும்

6.3. காடுகள் அழிவினால் பழங்குடிகளுக்கு உண்டாகும் பாதிப்புக்கள்

6.4. வனச் சட்டங்கள்

6.5. சமூக ஒழுங்க அமைப்பு

6.6. வீடு கட்டும் முறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள்

6.7. இனக்குழு அடையாளக் கூறுகள்

6.8. உணவு முறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள்

6.9. அணியும் உடைகளில் மாற்றங்கள்

6.10. அணிகலன்களில் மாற்றங்கள்

6.11. தொழில் முறைகளில் மாற்றங்கள்

6.12. திருமண முறைகளில் மாற்றம்

6.13. சடங்குகளில் மாற்றங்கள்

6.14. சமயங்களில் மாற்றங்கள்

6.15. கல்வியில் மாற்றங்கள்

6.16. பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

6.17. கூத்தின் இன்றைய நிலைகள்

6.18. சமூக அமைப்பில் ஏற்ப்பட்ட மாற்றங்கள்

6.19. மருத்துவ முறைகளில் மாற்றம்

6.20. போழுது போக்குகளில் மாற்றங்கள்

6.21. இன்றைய வாழ்வியல் மாற்றங்கள்

6.22. பொண்களின் நிலையில் மாற்றங்கள்

6.23. இளைஞர்களிடையே ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

6.24. புழங்குப் பொருட்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

6.25. தொகுப்புரை

## 6.0. முன்னுரை

"பழங்குடிகளின் வாழ்வாதாரங்களாக இருப்பவை வனங்களே. இவர்களுடைய வாழ்வின் பொருளாதார, சமூக, கலாச்சார, சமய அம்சங்கள் காடுகளோடு பின்னிப் பிணைந்தவை. இவர்கள் தங்களுடைய உணவிற்கும் பொருளாதாரத் தேவைகளுக்கும் மருந்துகளுக்கும் காடுகளையே சார்ந்து வாழ்கின்றனர். பழங்குடிகளின் சமய நம்பிக்கையில் மரங்கள், தாவரங்கள், விலங்குகள், பழங்கள் முக்கிய இடம்பெறுகின்றன. எந்த அளவிற்குத் தங்களின் வாழ்விற்காக காடுகளைச் சார்ந்து பழங்குடியினர் வாழ்ந்தார்களோ அந்த அளவுக்குக் காடுகளின் பாதுகாப்பும் இவர்களை சார்ந்தே இருந்தன"[1].

மனித சமூகம் நாகரிக வளர்ச்சி பெற்ற காலம் முதற்கொண்டே, பெருகிவரும் மக்கள் தொகையினால் அதிகமான உணவுத் தேவையும், வாணிகப் பயிர்களின் விரிவாக்கமும் ஏற்பட்டன. இதன் காரணமாகப் பழங்குடி மக்களின் வாழ்விடங்களான காடுகள் அழிக்கப்படுவதோடு பழங்குடி சமூகங்களும், பண்பாடுகளும் மறைக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாகப் பழங்குடிகள் காடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டுத் அன்றாட தினக்கூலிகளாக மாற்றப்பட்டு இன்று கடினமான வேலைகளுக்கும் குறைந்த கூலியினையே பெற்று வருகின்றனர்.

வெறும் இலாப நோக்கோடு மட்டுமே செயல்படும் வணிகர்களாலும், பண்ணை முதலாளிகளாலும் குத்தகைக்காரர்களாலும் கடன் கொடுப்பவர்களாலும் பழங்குடியினர் நசுக்கப்படுகின்றனர், ஒடுக்கப்படுகின்றனர், சுரண்டப்படுகின்றனர். வணிகத்திற்கான தொழில்மயமாக்கல் காரணமாக் காடுகள் அழிக்கப்படுவதால் இம்மக்களின் பழமையான வாழ்வும் சிதைக்கப்படுகிறது. காடுகள் அழிப்பு இப்பழங்குடியினரை நகரங்களை நோக்கி இடம் பெயரச் செய்கிறது. இன்று நகரங்களில் அடிப்படை வசதிகள் அற்ற சேரிகளில் அன்றாட தினக் கூலிகளாக இருப்பவர்களில் பொரும்பான்மையானோர் இப்பழங்குடி மக்களே ஆவர்.

இதன்படி நீண்டகால வரலாற்றுத் தொடர்ச்சியையும் பண்பாட்டு மரபினையும் கொண்ட சவ்வாது மலைப் பழங்குடியின மக்களின் வாழ்வியலிலும் இந்த வகையான சூழல்களே மாற்றங்களாக நிகழ்ந்துக் கொண்டிருக்கின்றன. பழங்குடி மக்களின் "மரபுகளும் மாற்றங்களும் சில வேளைகளில் ஒன்றையொன்று நிலைநிறுத்திக் கொள்ள முயற்சிக்கின்றது. இந்த மரபுகள் காலங்காலமாக வழிவழியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் சூழ்நிலையில் சில மரபுகள் கால ஓட்டத்திற்கு ஏற்ப தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் செயலே மாற்றமாகக் கருதப்படுகிறது"[2]. இம்மாற்றங்கள், மலையாளி இன மக்களிடையே

எவ்வாறு நடக்கின்றன இதனால் இம்மக்களிடையே ஏற்பட்டுள்ள இன்றைய வாழ்வியல் மாற்றங்கள் போன்றவற்றைப் பற்றி ஆராய்வதாக இந்த இயல் அமைகின்றது.

### 6.1. காட்டு வளங்கள் அழிப்பு

"உலகின் மொத்த நிலப்பரப்பான 14489.5 மில்லியன் ஹெக்டேரில் 4068.54 மில்லியன் ஹெக்டேர் (30.39%) பரப்பளவில் காடுகள் இருக்கின்றன. ஆனால் இந்தக் காடுகள் ஆண்டொன்றுக்கு 0.6. விழுக்காடு அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன"[3]. இந்தியாவின் காடுகளில் பெரும்பகுதி அரசுடைமையாக்கப்பட்டு வனத்துறையினரால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. "இந்தியாவில் உள்ள காடுகளின் மொத்தப் பரப்பு 7,43,584 ச.கி.மீ. ஆகும். இது இந்தியாவின் மொத்தப் பரப்பில் 22 சதவீதமாகும்"[4]. அவற்றில் ஆண்டொன்றுக்கு 1.5 மில்லியன் ஹெக்டேர் காடுகள் அழிக்கப்படுகின்றன. 1950க்கும் 1980க்கும் இடைப்பட்ட காலங்களில் 4.5 மில்லியன் ஹெக்டேர் காடுகள், அரசாங்க அங்கீகாரத்துடன் வளர்ச்சித் திட்டங்களுக்காகவும் விவசாயத்திற்காகவும் அழிக்கப்பட்டன. வனவழங்கள் அழிக்கப்படுவதால் அங்கு வாழும் பழங்குடி இன மக்கள் வாழ்விழந்து நகரங்களை நோக்கி படையேடுக்கத் துவங்கியுள்ளனர். இதனால் பழமையான பண்பாட்டைக் கொண்ட ஓர் இனம் அழிக்கப்படுவதுடன் பண்பாடும் சிதைக்கப்படுகிறது.

### 6.2. வனங்கள் அழிவுக்கான காரணங்கள்

காடுகள் அழிந்துக்கொண்டே வருவதற்கு மூன்று முக்கியக் காரணங்களைக் குறிப்பிடலாம்.

1. **மக்கள் தொகைப் பெருக்கம்**
2. **இயற்கைக் காரணங்கள்**
3. **வளர்ச்சித் திட்டங்களும் வன அழிப்பும்**

### 6.2.1. மக்கள் தொகைப் பெருக்கம்

இவை அதிகமான உணவுத் தேவையினையும், இருப்பிடத் தேவையினையும் உண்டாக்குகிறது. இதனால் விளை நிலங்களுக்காகக் காடுகள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. உணவு சமைக்க விறகின் தேவையும் பெருகுகிறது. 1981-82 இன் கணக்குப்படி ஆண்டொன்றுக்கு 150 மில்லியன் டன் தேவைப்படுகின்றது என்கின்றனர் வன ஆர்வளர்கள்.

### 6.2.2. இயற்கைக் காரணங்கள்

இயற்கை நிகழ்வுகளான தீ விபத்துக்கள், வெள்ளம், வறட்சி போன்றவையும் காடுகள் அழிப்பை அதிகப்படுத்தகின்றன. “வனங்களில் ஏற்படும் தீயினால் மட்டும் ஆண்டொன்றுக்கு 300,000 ஹெக்டேர் காடுகள் அழிக்கப்படுகின்றன. இதன் காரணமாக இந்திய தேசியப் பொருளாதாரத்திற்கு ரூ. 600 கோடி இழப்பு ஏற்படுகின்றது”[5].

### 6.2.3. வளர்ச்சித் திட்டங்களும் வன அழிப்பும்

காடுகளை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருள்களாக காடுகள் அழிக்கப்படுகின்றன. சாலைகள், நகரங்கள் அமைத்தல், தொடர்வண்டிகள் ஓடுதளம் அமைத்தல் போன்ற வளர்ச்சித் திட்டங்களுக்காகவும் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

## 6.3. காடுகளின் அழிவினால் பழங்குடியினருக்கு உண்டாகும் பாதிப்புக்கள்

காடுகள் அழிக்கப்படுவதால் மற்றவர்களைவிட பழங்குடி இன மக்கள் தான் பெரிதும் பாதிக்கப்படுகிறனர். பன்னெடுங்காலமாகக் காடுகளோடு இருந்த நெருங்கியத் தொடர்பு முறிக்கப்பட்டுப் பழங்குடியினரின் கலாச்சாரம் அந்நியமாக்கப்படுகிறது. மேலும் பழங்குடியினரின் அடிமைத்தனம், வறுமை, வருமான இழப்பு, நில இழப்பு, பேரம் பேசும் சக்தி குறைவு, கடன் கொடுப்பவர்களாலும், இடைத்தரகர்களாலும் நிலங்கள் அபகரிக்கப்படும் நிலை, வளர்ச்சி திட்டங்களினால் இடம் பெயர்க்கப்பட்டுச் சுரண்டப்படுதல், உடல் நலக்குறைவு, சத்தான உணவுப் பற்றாக்குறை, காடுகளை உற்பத்தி மூலப் பொருள்களாக மட்டுமே பார்க்கும் வன அதிகாரிகளும், காடுகளை வாழ்வின் ஆதாரமாகக் கொண்டுள்ள பழங்குடியினர்க்கும் இடையே பெருகிவரும் மோதல்களும் முரண்பாடுகளும் எனப் பல்வேறு பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

## 6.4. வனச்சட்டம்

பழங்குடியின மக்கள் ஆங்கிலேயர்கள் இந்தியா வருவதற்கு முன்பு வனங்களையும், வனத்தில் விளையும் பொருட்களையும் சுதந்திரமாகப் பயன்படுத்தி வந்தனர். பழங்குடியின மக்களுக்குக் காடுகளும் சொந்தமாக இருந்தன. ஆனால் ஆங்கிலேயரின் வருகைக்குப் பிறகு கொண்டுவந்த வனச்சட்டங்களால் அவற்றை முழுமையாகப் பயன்படுத்தப்படாத நிலை உருவாகின. பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பாளர்கள் இயற்கை வளங்களை இலாப நோக்கத்தோடு சூறையாடுவதற்காக வனச்சட்டங்களை ஏற்படுத்தினர். இதே சட்டங்களைச்

சுதந்திர இந்தியாவும் கடைப்பிடித்ததோடு வனத்துறையினர், இம்மக்களின் பாரம்பரிய உரிமைகளைப் பறித்துப் பல்வேறு துயரங்களை ஏற்படுத்தி வந்தனர்.

‘ஆக்கிரமிப்பு அகற்றல்’ என்ற பெயரில் தங்களது சொந்த வன நிலத்திலிருந்து வெளியேற்றும் முயற்சியாக உயிர் உடைமைகளுக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளனர். வெளியேற்றப்பட்ட லட்சக்கணக்கான மக்களுக்கு எந்தவித மறுவாழ்வுக்கான ஏற்பாடும் செய்யப்படவில்லை. பாரம்பரியக் காடுகளிலும் சொந்த வீடுகளிலும் ஆக்கிரமிப்பாளர்களாக அடையாளம் காட்டப்பட்டுள்ளனர். **‘பிள்ளைப் பெயரைச் சொல்லி பூதம் தின்னது போல்’** காடுகளை அழித்த வனத்துறையினரும், கொள்ளையாளரும் பழியை பழங்குடி மக்கள் மீது போட்டிருப்பதோடு இக்கருத்தைப் பரப்பியும் வருகின்றனர். மக்களின் பாரம்பரியக் காடுகளும் நிலங்களும் பெரும் கம்பெனிகளுக்கும், பெருந்தோட்டங்களுக்கும் கொடுக்கப்பட்டன. இதனால் பெருவாரியான காடுகள் அழிக்கப்பட்டன.

எந்தவித ஆய்வும் மேற்கொள்ளாமல் காடாக இல்லாத நிலப்பகுதியையும் வனத்துறையினர் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளனர். இதன் மூலம் இந்தியாவில் பெரும்பாலான வளமான வன நிலங்கள் வனத்துறையின் கட்டுப்பாட்டிலும் அதிகாரத்திலும் உள்ளது. ஆகவே வனத்துறையினர் நிலச்சுவான்தார் போல் செயல்படுவதோடு அதே மனநிலையையும் கொண்டுள்ளனர்.

### 6.5. தொழில் முறைகளில் மாற்றம்

ஆரப்பக்காலத்தில் மலையாளிகளின் தொழில் வேட்டையாடுதல், வனப் பொருட்களைச் சேகரித்தல், காடுகளைத் திருத்தி வேளாண்மை செய்தல் போன்றவைகளே இவர்களின் முக்கியத் தொழிலாக இருந்தது. ஆனால் இன்றைய நவினமயமாக்கள் காரணமாக அவற்றில் சில மாறுதலுக்கு உட்பட்டு வருகின்றன.

வனங்களில் கிடைக்கும் பொருட்களைச் சுதந்திரமாகப் பயன்படுத்திய இப்பழங்குடி மக்கள் வனச்சட்டங்கள் மூலம் அவற்றைச் சேகரிக்க முடியாத சூழல் உருவாகியுள்ள போதும் வனங்களில் நாடோடிகளாக வாழ்ந்த நிலை மாறி, இப்பொழுது ஒரே இடத்தில் வாழும் நிலைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். வானம் பார்த்த பூமியில் பயிர் செய்யும் இப்பழங்குடிகள் அதில் கிடைக்கும் வருமானம் இவர்களுடைய பொருளாதார தேவையை நிவர்த்தி செய்யும் அளவுக்கு இல்லை. அரசு பழங்குடி இன மக்களுக்கு கொடுத்த நிலத்தை பிற இன முதலாளிகள் குத்தகைக்கு எடுத்து வருகின்றனர். இதன் காரணமாக

பழங்குடி மக்கள் வேலைத் தேடிச் சமவெளிப் பகுதிகளுக்குச் சென்று அன்றாடக் கூலிகளாக வேலை செய்து வருகின்றனர்.

தினை, சாமை, வரகு, பனிவரகு என்று பயிர் செய்தவர்கள், தற்பொழுது மரவள்ளிக் கிழங்கைப் பயிரிடத் தொடங்கி விட்டனர். இ.்.து ஒரு வருடப் பயிராகும். மழைப் பொழியும் காலம் பார்த்துப் பயிர் செய்து விட்டு, சென்னை, பெங்களுர், திருப்பூர் என்று பல நகரங்களுக்கு கட்டிடங்கள் கட்டும் பணிக்குக் கூலிகளாகச் சென்று வருகின்றனர். ஒரு சிலர் தீபாவளி, பொங்கல் போன்ற முக்கியமான நாட்களில் மட்டும் வந்துச் செல்வர். பின்னர், பயிர் அறுவடைக் காலம் வந்தவுடன் அறுவடை செய்ய வருகின்றனர். இவ்வகையான வேலைக்கு ஆண், பெண் என இருபாலரும் சென்று கூலிவேலை செய்கின்றனர். இவர்கள் உறங்குமிடம் தெருக்களும், புதிதாகக் கட்டப்படும் கட்டிடங்களும் ஆகும். இவ்வாறு இவர்களின் தொழில் முறைகளில் மாற்றங்களுக்கு உட்பட்டு வருவதைக் கள ஆய்வின் போது காணமுடிந்தது.

## 6.6. இளைஞர்களின் இன்றைய தொழில்கள்

காடுகளையும் மலைகளையும் இருப்பிடங்களாகக்கொண்டு வாழ்ந்து வரும் பழங்குடி இனமக்கள் அரசு வழங்கிய நிலங்களில் பத்துத் தலைமுறைகளுக்குமேல் காடுகளைப் பன்படுத்தி வேளாண்மை செய்து வாழ்ந்து வருகின்றனர். தேவைக்கு அதிகமாக உழுது உழுது சக்தியிழந்துள்ள நிலங்களிலும், காடுகளிலும் துன்பத்திலே உழன்ற இம்மக்கள் பெரும்பான்மையர் காடுகளில் நிலவிய பஞ்சம் வரட்சிகளால் துரத்தப்பட்டு இன்று நகரங்களில் கடுமையான சோர்வு தரும் வேலைகளைச் செய்து வருகின்றனர். இவ்வாறு வாழ்வாதாரத்துக்காக வேலைத் தேடிச் செல்லும் தமிழக இளைஞர்களை, செம்மரக்கட்டைகளை வெட்டி, கடத்துவதற்குச் கடத்தல் கும்பல்கள் பயன்படுத்திக் கொள்கின்றன. இதனால், கூலி வேலைக்குச் சென்று, கொலை வழக்கில் பலர் சிக்கிக் கொள்ளப்படுவதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர்.

“சந்தன மரத்திற்கு அடுத்தப்படியாகச் செம்மரங்கள் சிறப்பு மிக்கதாகக் கருதப்படுகின்றன. அதிலும் இந்தியாவின் தென் மாநிலங்களில் உள்ள செம்மரங்களுக்கு வெளிநாடுகளில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றன. இந்தியாவின் தென் மாநிலங்களில் உள்ள செம்மரக் கட்டைகளுக்குச் வெளிநாடுகளில் நல்ல வரவேற்பு உள்ளது. இங்கு ஒரு கிலோ ரூ.2000 விற்கப்படும் இந்தக் கட்டைகள் வெளிநாடுகளில் ரூ.6000 வரை விற்கப்படுகின்றன. விலை மதிப்பு அதிகமாக இருப்பதே செம்மரங்களைக் கடத்துவது அதிகரிக்க முக்கியக் காரணம்”[6] என்கின்றனர் வன ஆர்வலர்கள்.

## 6.7. மரங்களின் பயன்பாடு

மரங்களிலேயே வாசத்திற்குப் பெயர் போனது சந்தன மரங்கள் ஆகும். இதன் காரணமாகத்தான் அவை அதிகளவில் கடத்தப்பட்டும் வந்தன. ஆனால், அண்மைக் காலமாகச் செம்மரக் கட்டைகளும் அதிகளவில் கடத்தப்பட்டு வருகின்றன. சீனா, தைவான் போன்ற நாடுகளில் செம்மரக்கட்டைகள் இசைக்கருவிகள், துப்பாக்கிகள் உள்ளிட்டவை தயாரிக்க பயன்படுத்தப்படுவதாகக் கூறப்படுகின்றன. இந்த மரம் மருத்துவ குணம் நிறைந்ததாகவும், வீட்டின் கதவுகள் செம்மரக்கட்டைகளால் செய்யப்பட்டால் எப்போதும் குளிர்ச்சி நிலவும் என்றும் கூறுகின்றனர். இது தவிர செம்மரக்கட்டைகளை அதிஷ்டம் தரக்கூடிய பொருளாகவும் பார்க்கப்படுகிறது. கதிர் வீச்சைத் தடுக்கும் மரம், இடிகளைத் தாங்கும் மரம் என்று பல்வேறு சிறப்பம்சங்கள் இந்த மரத்திற்கு உண்டு.

“செம்மரம் (PTEROCARPUS SANTALINUS) தாவர இனத்தைச் சேர்ந்தது. இந்த மரத்திற்கு ரத்தச்சந்தனம், செஞ்சந்தனம், (RED SANDALWOOD) போன்ற பெயர்களும் உண்டு. இந்த மரத்திலிருந்து வெட்டப்படும் கட்டைகள் நீரிழிவு நோயைக் குணப்படுத்தும் என்று நம்பப்படுகிறது. செம்மரக் கட்டைகளால் ஒரு கிண்ணத்தைச் செய்து அதில் நீரை நிரப்பி உட்கொண்டால் சர்க்கரை நோய் குணமாகும் என்றும் ஒரு நம்பிக்கை உண்டு. இந்த மருத்துவக் குணங்களுக்காகச் சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு இந்த மரங்கள் கடத்தப்படுகின்றன 25 வயதிலிருந்து 30 வயது வரை உள்ள வளர்ந்த செம்மரங்களே அதிகம் வெட்டப்படுகின்றன. இந்த மரக்கட்டைகளின் மதிப்புப் பல லட்சங்கள் இருக்கலாம் என்கின்றனர் இயற்கை ஆர்வலர்கள். தோராயமாக இந்த மரத்தின் ஆயுட்காலம் 100 ஆண்டுகள் ஆகும். இந்த மரம் சாதாரனமாக 50 அடி உயரம் வரை வளரும். இந்த மரங்கள் செம்மண் மற்றும் கருப்பு நிறத்தில் உள்ள கடப்பா கற்கள் நிறைந்த நிலப்பகுதியில்தான் அதிகம் வளர்கின்றன. இந்த மரங்கள் வெட்டப்படுவது தற்போது தடுக்கப்படாவிட்டால் சந்தன மரங்கள் அழிக்கப்பட்டதைப் போன்று வருங்காலத்தில் செம்மரங்கள் முழுவதும் அழிந்து போய்விடும் நிலை உருவாகிவடும்”[7] என்கின்றனர்.

## 6.8. மரங்களைக் கடத்தல்

தமிழகத்தைப் பொறுத்தவரை வேலூர் மாவட்டம் குடியாத்தம், திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலை ஆகிய பகுதிகளில் செம்மரங்கள் பரவலாகக் காணப்படுகின்றன. ஆந்திராவில் திருப்பதி மற்றும் கடப்பாவில் செம்மரங்கள் அதிக அளவில் உள்ளன. வெட்டுவதற்கு ஒரு கும்பல், அதனைக் கடத்துவதற்கு ஒரு கும்பல், மரங்களை விற்பனை செய்வதற்கு ஒரு குழு, எனச் சங்கிலித்தொடர் அமைப்பு இதன் பின்னணியில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

முதலில் இடைத்தரகர்கள் மூலம் செம்மரங்களை வெட்ட மலை கிராமங்களில் இருந்து ஆட்கள் அழைத்துவரப்படுகின்றனர். இவ்வாறு வெட்டப்படும் மரங்கள் தோல் தொழிற்சாலைகள் அதிகம் உள்ள ஆம்பூர் வாணியம்பாடி உள்ளிட்ட பகுதிகளில் பாதுகாப்பாகப் பதுக்கி வைக்கப்படுகின்றன. திருப்பதியில் இருந்து கடத்திவரப்படும் செம்மரங்கள் திருவள்ளூரில் பதுக்கிவைக்கப்படுகிறது. இதற்காகக் கிடங்குகளுக்கு ரூ.20 ஆயிரத்திற்குமேல் வாடகை அளிக்கப்படுவதாகக் சொல்லப்படுகிறது. லாரிகளில் செம்மரக்கட்டைகள் அடுக்கப்பட்டு அதற்கு மேல் தோல்களைப் போட்டு மூடி அது சென்னை துறைமுகத்திற்கு எடுத்துச் செல்லப்படுவதாகவும் கூறப்படுகிறது.

கார்கள் மூலம் சிறிது சிறிதாகவும் செம்மரக் கட்டைகள் துறைமுகத்திற்குக் கொண்டு செல்லப்படுவதும் உண்டாம். பின்னர் அதிகாரிகளின் கண்ணீல் சிக்காமல் கண்டெய்னர்களில் செம்மரக்கட்டைகளை ஏற்றுவதுடன் கடத்தல் கும்பலின் வேலை முடிகிறது. இதன்பிறகு வெளிநாடுகளில் இருந்து செயல்படும் கும்பல் கப்பல் மூலம் செம்மரங்களை மலேசியா, சிங்கப்பூர் வழியாகச் சீனாவிற்குக் கொண்டு சென்று விற்பனை செய்யப்படுகிறது. வெளிநாடுகளில் உள்ள குழுக்கள் பணவலிமைப் பெற்று இருப்பதால் செம்மரங்கள் வெட்டுவது கடத்துவது விற்பது என அனைத்தும் சத்தமின்றி நடத்திவருவதாக கூறுகின்றனர்.

## 6.9. மலைக் கிராம இளைஞர்களின் சோகம்

செம்மரக்கட்டைகளை வெளிநாடுகளில் விற்பசைன் செய்து, ஒரு கும்பல் கோடி கோடியாகக் கொள்ளையடித்துக் கொண்டிருக்க, இவர்களிடம் மரம் வெட்டுவதற்காகக் கூலி வேலைக்குச் செல்லும் மலைக் கிராம இளைஞர்கள் குற்ற வழக்குகளில் சிக்கி வெளிமாநில சிறைகளில் தவித்துக் கொண்டிருக்கின்றனர். “வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட வனப்பகுதிகளில் 250-க்கும் மேற்பட்ட மலை கிராமங்கள் உள்ளன. கடந்த 10 தலைமுறைகளுக்குமேல் இங்கு வசிக்கும் மலையாளி இனப் பழங்குடி மக்களுக்கு, விவசாயமும், மரத்தை வெட்டி விறகாக விற்பதும், வனப் பொருட்களைத் செகரித்தல் போன்றவைகள் இவர்களின் தொழிலாகும். வனவழங்கள் அழிக்கப்பட்டு வருவதால் மழையளவு குறைநது விவசாயம் செய்வோரின் எண்ணிக்கையும் குறைந்துபோனது. நாகரீக வளர்ச்சியால், விறகிற்கும் மதிப்புக் குறைந்தது. இதனால், வாழ்வாதாரத்துக்கு வழியில்லாமல் தவித்த மலைக் கிராம இளைஞர்களைக் குறிவைக்கத் தொடங்கியது செம்மரக்கட்டை கடத்தல் கும்பல். அதன்படி, சென்னையில் இருந்து செல்லும் ஒரு கும்பல், இளைஞர்களை ஆந்திர மாநில வனப்பகுதிக்கு அழைத்துச்சென்று செம்மரங்களை வெட்ட பயன்படுத்துவதாக”[8] சவ்வாதுமலை கிராமங்களின் பிரமுகர்கள் கூறுகின்றனர்.

மரம் வெட்டும் இளைஞர்களை, நாள் ஒன்றுக்கு ரூ.300 சம்பளத்தில் 15 நாட்களுக்குக் கடத்தல் கும்பல் ஒப்பந்தம் செய்கிறது. இதற்கு முன்பணமாக ரூ.5000 அந்த இளைஞர்களின் பெற்றோர்களிடம் வழங்குகிறது. பின்னர், அந்த இளைஞர்கள் லாரிகள் மூலம் ஆந்திர வனப்பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர். ஒரு மணி நேரத்தில் பத்து மரங்களை வெட்டி, துண்டாக்கி, அவற்றை லாரிகளில் ஏற்றிவிடும் இந்த இளைஞர்களுக்கு, தாங்கள் வெட்டுவது செம்மரங்கள் என்பதும், அவை வெளிநாடுகளுக்குக் கடத்தப்படுகின்றன என்பது கடைசிவரை தெரிவதில்லை என்கின்றனர் பாதிக்கப்பட்டவர்கள்.

மலைக் கிராம இளைஞர்களின் இந்த அறியாமையைப் பயன்படுத்திக்கொள்ளும் கடத்தல் கும்பல், கோடிக்கணக்கில் கொள்ளை இலாபம் சம்பாதித்துக்கொண்டு இருக்கின்றது. ஆனால், குற்ற வழக்குகளில் சிக்கிக் கொள்ளும் இந்த இளைஞர்கள், பல ஆண்டுகள் சிறைத்தண்டனைக்கு ஆளாகின்றனர். அதன்படி, கேரளா மற்றும் ஆந்திர மாநிலச் சிறைகளில் சுமார் 2 ஆயிரத்து 500 இளைஞர்கள் அடைக்கப்பட்டுள்ளதாக மலைக் கிராம மக்கள் வேதனையோடு தெரிவிக்கின்றனர். இதுபோன்ற குற்றங்களைத் தடுக்க, இளைஞர்களுக்கு உரிய வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு இருமாநில வனத்துறையிடமும் மலையாளிகள் தங்கள் கோரிக்கையை முன்வைத்து இருக்கின்றனர்.

### 4.4. சமுக ஒழுங்கமைப்பு

சவ்வாது மலைப்பகுதிகள் பதினெட்டு நாடுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு நாட்டிற்கும் நாட்டார் அல்லது நாட்டுக்கவுண்டர் என்பவரும், அந்நாடுகளுக்கு உட்பட்ட கிராமங்களின் தலைவர் ஊரான் அல்லது ஊர்கவுண்டர் என்பவரும் நியமிக்கப்பட்டு நிர்வகித்து வருகின்றனர். இவர்கள் இருவருக்கும் ஊர்க்கூட்டம், நாட்டுக் கூட்டம் கூட்டவும், பிரச்சனைகளைத் தீர்க்கவும், தண்டனை வழங்கவும், ஊர், நாடு குறித்த முடிவுகள் எடுக்கவும் இவர்களுக்கு அதிகாரம் இருந்தன. இவ்வாறு அமையும் ஒவ்வொரு நாட்டிற்கும் 'மணியக்காரர்' என்ற நிர்வாகத் தலைவர் ஒருவர் உண்டு. இவரே பொருளாதார காரியங்கள் அனைத்திற்கும் பொருப்பாளராகவும் இருந்தார். வரிகள் விதித்தல், அவற்றைப் பிரித்தல் போன்ற பணம் மற்றும் நிலம் சார்ந்த அனைத்துச் செயல்பாடுகளும் இவரே பொருப்பாளராகவும் இருப்பார்.

இவர்களின் பதிலிகளாக இன்று அரசு நியமிக்கும் பதவிகளான பஞ்சாயத்துத் தலைவர், சேர்மன், பிரிசிடென்ட்கள் உள்ளனர். இருப்பினும் ஊரின் செல்வாக்கையும், மரியாதையையும் நாட்டான் மற்றும் ஊரான் போன்றவர்களே பாதுகாத்து வருகின்றனர். ஆனால் மணியக்காரர் என்ற பதவி மட்டும் இன்று மறைந்து வருகிறது. இவரின் இடத்தை கிராம நிர்வாக அலுவலர் பெற்றுள்ளார். இவ்விரு தலைமை பதவிகளையும் தவிர ஊரின் சமயச்சடங்குகளுக்கு அதிபதியாகயும், கோவில் பூசாரியாகவும் இருக்கும் மனிதரை

‘சாந்திக்காரர்’ என்று அழைக்கின்றனர். இவர்மேல் பயம் கலந்த மரியாதை அன்று முதல் இன்று வரை அனைவரிடமும் இருந்து வருகின்றது. இவரது சொல் சக்தி வாய்ந்ததாகவும், கடவுளின் ஆவி இவர் வழியே செயல்படுவதாகவும் மக்கள் நம்புகின்றனர். அடுத்த முக்கிய இடத்தைப் பெருபவராகக் தெருக்கூத்து வாத்தியார் இருந்து வருகிறார். இதனால் இம்மலைப் பகுதிகளில் தெருக்கூத்து மதிக்கப்படும் ஒரு கலையாக இன்றளவும் வளர்ந்து வருகின்றது.

## 4.5. வீடு கட்டும் முறைகளில் ஏற்பட்ட மாற்றங்கள்

சவ்வாது மலையிலுள்ள பெரும்பாலான மலையாளிகளின் வீடுகள், அரசாங்கத்தின் உதவியால் தற்போது ஓடு வேய்ந்த வீடுகளாக மாறிவிட்டன. சிலருக்கு இலவசக் காரை (கான்கிரீட்) வீடுகளையும் கட்டிக் கொடுத்திருக்கிறது. ஆனால், அனைவருக்கும் இத்தகைய வசதிகள் கிடைத்திருக்கின்றன என்று சொல்ல முடியாது. முன்பெல்லாம் மலையாளிகள் நன்கு அமைக்கப்பட்ட வீடுகளில் வாழ்வதை விரும்பாமல் இருந்தார்கள். தற்போது நாகரீகத் தாக்கம் பெற்றதால் அவர்களிடையேயும் மாறுதல்கள் நிகழ்ந்து விட்டன. ஆனால் இன்னும் சில முதியவர்களுக்குக் கான்கீரிட் வீடுகளில் வாழ்வது என்பது சற்றுச் சிரமமாகவே இருக்கின்றது என்பதைக் கள ஆய்வின் போது உணர முடிந்தது. அதற்குக் காரணம், குடிசை வீடுகளில் கிடைக்கும் குளுமை கான்கீரிட் வீடுகளில் கிடைப்பதில்லை என்பதேயாகும். அதுமட்டுமின்றி, குளிர் காலங்களில் புல்லாலும், இலைகளாலும் வேயப்பட்ட குடிசைகளில் கதகதப்பான நிலை காணப்படும். எனவே குளிரின் தாக்குதல் குறைவாகக் காணப்படும். இதனால் கான்கீரிட் வீடுகள் அம்மக்களுக்குப் பிடிப்பதில்லை.

வீட்டிற்கு மரத்தால் வாயிற்படியும், மரக் கதவுகளும் வைத்துக் கட்டுகின்றனர். பித்தளையால் குடம், தம்ளர், தட்டுகள் போன்றவற்றை வாங்கிப் பயன்படுத்துகின்றனர். அலுமினியப் பாத்திரங்களையும், விரும்பி பயன்படுத்தி வருகின்றனர்.

## 6.6. இனக்குழு அடையாளக் கூறுகள்

மலையாளிகளின் வாழ்வியல் சார்ந்த பண்பாட்டுக் கூறுகளை உற்று நோக்கும்போது தொல்குடிகளுக்கான அடையாளம் புலப்படுகிறது.

1. பிற இனக் குழு மக்களைப் போன்றே மலைகளில் வாழ்கின்றனர்.
2. சமவெளியில் வாழும் எப்பிரிவினருடனும் மண உறவு கொள்வதில்லை.
3. ஊரான் (ஊர்த்தலைவர்), நாட்டான் (பத்துக் கிராமங்களுக்குத் தலைவர்), என்ற இனக்குழு ஆட்சி முறைகள் நடைமுறையில் உள்ளன.
4. ஊர்கள் தோறும் ‘சாவடி’ என்னும் இனக்குழு மன்றம் அமைந்துள்ளது.

5. கால்வழி முறை (Clar System) இவர்களிடையே இடம்பெற்றுள்ளது.
6. பணத்தை மையமாகக் கொண்ட வாணிகத்தைவிட பண்டமாற்று முறையே அதிக அளவில் உள்ளது.

மேற்கண்ட இனக்குழுத் தன்மைகள் மிகுந்திருந்தாலும், வேளாண்குடி மக்களுடைய கூறுகள் சிலவும் இவர்களிடையே இடம்பெற்றுள்ளன. அவை.

1. நிலைத்த வேளாண்குடிகளாக உள்ளனர்.
2. சொந்தமாக நிலத்தைக் கொண்டுள்ளனர்.
3. இன்று மலையாளிகள் அணியும் அணிகளன்களும், ஆடைகளும், சமவெளிப் பகுதியில் வாழும் குடியானவர்கள் பயண்படுத்துவதைப் போலவே உள்ளன.
4. உழவர்களைப் போலவே தைப்பொங்கள் திருநாளைக் கொண்டாடுகின்றனர்.
5. நில உரிமைக்கான பட்டாவை வைத்திருப்பதோடு நிலத்திற்கு வரியும் செலுத்துகின்றனர்.

இவ்வாறு சவ்வாதுமலை பழங்குடி இன மக்களிடையே இனக்குழு வாழ்வியல் கூறுகளும், வேளாண்மை வாழ்வியல் கூறுகளும் கலந்த ஒரு சமுக அடையாளக் கூறுகளை இவர்களிடையே காணமுடிகின்றன.

### 6.10. உணவு முறைகளில் மாற்றம்

கிழங்குகள், கீரைகள், தினை, சாமை, தேன் போன்ற சத்தான உணவுப் பொருள்களை உண்டு வாழ்ந்த இப்பழங்குடி மக்கள், இன்று கூட்டுறவுக் கடைகளில் மலிவு விலையில் கிடைக்கும் அரிசியை வாங்கி உண்கின்றனர். தங்களுடைய நிலங்களில் கிடைக்கும் தானியங்களை வார சந்தையில் விற்று விட்டு அந்தப் பணத்தைத் தங்களுடைய பிள்ளைகளின் திருமணச் செலவு, வீடுகட்டுதல், கிணறு வெட்டுவதற்கு எனப் பல நிலைகளில் பயன்படுத்தி வருகின்றனர். கூட்டுறவுக் கடைகளில் கிடைக்கும், மலிவுப் பொருட்கள் தரமானதாகவும், சத்தான உணவுப் பண்டமாகவும் இருப்பதில்லை. சமவெளிப் பகுதி மக்கள் பயன்பாட்டிற்கு எஞ்சிய அரிசியே இப்பழங்குடி இனமக்களுக்குக் கிடைக்கின்றது. இதன் காரணமாக அதிக நேரம் தங்களுடைய நிலங்களில் வேலை செய்ய முடியாத நிலையில் இருக்கின்றனர். தரமான உணவு வகைகள் அமையாததால் இவர்கள் பல்வேறு நோய்களுக்கு உள்ளாக்கப்பட்டும் வருகின்றனர். இவர்களின் உடலில் நோய் எதிர்ப்புச் சக்கி மிகக் குறைவாவே இருக்கின்றது. குழந்தைகள் இறந்து பிறத்தல், பச்சிளம் குழந்தைகளின் இறப்பு என இவர்களின் மத்தியில் அடிக்கடி நிகழும் சாதாரன

நிகழ்வுகளாக மாறிவிட்டன. முதியவர்கள் உயிர்வாழும் ஆண்டுகளும் கணிசமாக குறைந்து வருகின்றன.

தாங்கள் உற்பத்தி செய்யும் தரமான, சத்தான உணவுப் பண்டங்களைத் தாங்களே பயன்படுத்த முடியாத சூழல் தான் இன்றும் பல்வேறு வகையான பழங்குடியின மக்களிடத்திலேயும் காணப்படும் ஒன்றாக இருந்து வருகிறது. எனவே, இவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் மருத்துவக் குணத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்லி, அவர்களும் அதனைப் பயன்படுத்தி நல்வாழ்வு வாழ இன்றைய அரசு அவர்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தினால் இம்மக்கள் தங்களின் பாரம்பரிய உணவை உண்டு, நல்ல உழைப்பாளராகவும், தொன்மையான பண்பாட்டு அடையாளமாகவும் இருப்பார்கள்.

## 6.11. உடைகளில் மாற்றங்கள்

முற்காலத்தில் கோவணமும், வேட்டி துண்டும் உடுத்தி இருந்த மலையாளியின ஆண்கள் தற்காலத்தில் ‘கைலியும்’, ‘வேட்டியும்’ கட்டத் தொடங்கியுள்ளனர். நல்லசிவப்பு நிறமாகவும், சிலர் கருப்பாகவும், அழகாகவும், உடல் கட்டுடனும் இருக்கின்றார்கள். சிலர் மட்டும் தங்களுடைய குல வழக்குப்படி மேலே ஒரு துண்டும், உருமாலும் அணிந்து கொண்டு இருக்கின்றனர். இளைஞர்கள் சமவெளிப் பகுதிகளுக்கு வேலைக்குச் செல்வதாலும், திரைப்படம், தொலைகாட்சிகள் பார்ப்பதாலும் அவர்களுள் சிலர் எல்லாவித ஆடைகளையும் கலந்து அணிய விரும்புகின்றனர்.

முந்தையக் காலத்தில் பெண்கள் சட்டையே போடாமல் புடவையை மட்டும் அணிந்திருந்தனர். தற்போது மாற்றம் அடைந்துள்ளது. இன்று புடவையும், ரவிக்கையும் அணியத் தொடங்கிவிட்டனர். திருவிழா, திருமணம் போன்ற விசேஷமான நாட்களில் மட்டுமே புத்தாடைகளை அணிந்துக்கொள்கின்றனர்.

## 6.12. அணிகலன்களில் மாற்றங்கள்

கை விரல்களில் மோதிரமும், காதில் பெரிய கம்மலும் மூக்கில் பொன் வட்டமான மூக்குத்தியும், கையில் காப்பும், வெள்ளி வளையமும் அணிகின்றனர். கழுத்தில்தாலியும், வெள்ளிச் சங்கிலிகளும், சிலர் தாலிச்சரடும் அணிந்திருக்கின்றனர். இத்தகைய உடை அலங்காரங்களை அவர்களின் சக்திக்குத் தகுந்தாற் போல் அணிய விரும்புகின்றனர். முற்காலத்தில் நூலில் தட்டைப்பாசியும், பனை ஓலையால் வட்டமாகச் செய்த காதோலையையும் அணிந்திருந்தனர். செம்பரக்குஞ்சு தலை, புங்கம்பூ, காட்டு மல்லி, செண்பகப்பூ போன்றவற்றைத் தலையில் சூடினர். ஆனால் இன்று குறிப்பாக இளம் பெண்கள் தலையில் கொண்டை ஊசி குத்திக் கொள்ளுவதையே பலவகையில்

விரும்புகின்றனர். தலைமுடிக்குச் சுங்கு வைத்தல், ரப்பர்ப் பூக்களை வாங்கித் தலைமுடியில் செருகிக்கொள்ளுதல், திருமணமானவர்கள் சில்வர், வெள்ளியால் ஆன கால்மெட்டி அணிந்து கொள்ளுதல், சில்வர், தங்கம்மோதிரம், வளையல் ஆகியவற்றை அதிகம் வாங்கி அணியும் பழக்கத்தை உடையவர்களாக இருக்கிறார்கள்.

இளைஞர்கள், சாமிபடம், நடிகர்கள் உருவம் பதித்த பதக்கக் கயிறு போன்றவற்றை வாங்கி அணிந்துக் கொள்வதை அதிகம் விரும்புகின்றனர். வசதியான சிலர் தங்க மோதிரம், தங்க சங்கலி போன்றவற்றை அணிந்திருகின்றனர். காலுக்குத் தோல், (ரப்பர்), நெகிழி (பிளாஸ்டிக்), ஆகியவற்றால் உருவாக்கப்பட்ட காலனிகளைப் பயன்படுத்த துவங்கியுள்ளனர். இதனை நகரங்களில் கிடைக்கும் அழகுசாதனக் கடைகளில் ஆசையுடன் வாங்கி பயன்படுத்தி வருகின்றனர். இவர்களின் வருமானம் மிகக்குறைவாக இருந்தாலும் இத்தகைய அழகுசாதனப் பொருட்களில் அதிகமான பணத்தை வீணடிக்கின்றனர்.

## 6.13. திருமண முறைகளில் மாற்றம்

மலையாளிகளின் திருமணம் முன்பு ஐந்து முதல் பத்து நாள்கள் வரை நடைபெற்று வந்தது. ஆனால், இன்று சில மாற்றங்களுக்கு உட்பட்டு வருகின்றன. திருமண நிகழ்வை மூன்று நாட்களில் முடித்துக்கொள்கின்றனர். பரிசபணம் பத்தாயிரம் முதல் இருபதாயிரம் வரையும் கொடுத்து பெண் எடுக்கின்றனர். சிலர் மூன்று அல்லது ஐந்து பவுன் தங்க நகைகள் போட்டும் பெண் எடுக்க தொடங்கியுள்ளனர். அக்காள்மகள், மாமன்மகளைத் திருமணம் செய்த இவர்கள் இன்று முறையுள்ள குடும்பங்களிலும் பெண் எடுக்கின்றனர். குறைவான வயதில் நடந்த திருமணம் தற்போது பதினெட்டு வயது பூர்த்தி அடைந்த பின்னரே திருமணத்தை நடத்திகின்றனர்.

வெற்றிலை, பாக்கு வைத்துத் திருமணத்திற்கு அழைப்பு விடுத்த இவர்கள் தற்பொழுது பத்திரிகை அடித்துக் கொடுக்கின்றனர். நல்ல திறமையான மணமகன் கிடைத்தால் போதும் என்றிருந்த இப்பழங்குடிகள் இன்று அரசு நிறுவனத்திலோ அல்லது குறைந்த பட்சம் படித்த மணமகனையே அதிகமாக விரும்புகின்றனர். படித்த இளைஞர்களுக்கு எப்படியும் வேலை கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் பெண் கொடுக்கின்றனர். அவரவர் வீட்டில் நடைப்பெற்ற திருமணம் ஊர் பொது இடமான சாவடியில் நடைபெறுகின்றது. பாரம்பரிய உணவான பன்றிக்கறியை மறந்து இன்று கோழிக்கறி அல்லது ஆட்டுக்கறி உணவு திருமணத்தில் பரிமாறப்படுகிறது. பழங்குடி இன மக்கள் மட்டும் கலந்து கொண்ட இவர்கள் திருமணத்தில் இன்று சமவெளிப்பகுதி மக்களும் கலந்துகொள்கின்றனர். காட்டு மலர்களைக் கொண்டு அலங்கரிக்கப்பட்ட இவர்களின் திருமணப் பந்தல், இன்று பல்வேறு வண்ணக் காகிதங்களால்

அலங்கரிக்கப்படுகின்றன. சில திருமணங்கள் சமவெளிப்பகுதியிலும் நடைபெறுவதுண்டு. மலையாளிகளின் திருமணம் காலமாற்றங்களுக்கு ஏற்ப சில மாறுதலுகு உட்பட்டிருப்பினும் இன்றலவும் பெண்ணிற்குப் பரிசபணம், நகைகள் கொடுத்தே பெண் எடுக்கும் முறையைப் பின்பற்றி வருகின்றனர்.

### 6.14. சடங்குகளில் மாற்றம்

ஆரம்ப காலங்களில் காடுகளில் கிடைக்கும் வகை வகையான பழங்கள், பூக்கள் தினைப் பண்டங்கள், பொருட்கள் போன்றவற்றைச் சடங்குகளில் வைத்துப் படைத்த இவர்கள் இன்று சந்தைகளில் கிடைக்கும் பூக்கள், இனிப்புப் பொருட்கள், பழங்கள் போன்றவற்றை வாங்கி வந்து தெய்வங்களுக்குப் படைக்கின்றனர். இதனைக் கால வளர்ச்சியினால் ஏற்பட்ட மாற்றங்கள் என்று கருதாமல்; மக்களின் பண்பாட்டு அடையாளத்தில் ஏற்பட்ட மாற்றத்தின் உச்சம் எனக் கூறலாம்.

### 6.15. சமயங்களில் மாற்றம்

எந்த ஒரு அமைப்புரீதியான மதத்தையும் சாராமல் தங்களுக்கென்று தனித்தன்மையான வழிப்பாட்டு முறைகளைக் கொண்டிருந்த மலையாளிகள் இன்று இந்துமத வழிப்பாடுகளைப் பின்பற்றுகின்றனர். ஆண்டுக்கொரு முறைக் குலதெய்வத் திருவிழா மட்டுமே கொண்டாடிய இவர்கள் இன்று தீபாவளி, பொங்கல், கார்த்திகை, விநாயகர் சதுர்த்தி போன்ற திருநாள்களையும் கொண்டாடி வருகின்றனர். பழனி, திருச்செந்தூர், திருத்தனி போன்ற முருகன் கோவில்களுக்கும், ‘ஐயப்பன்’ கோவிலுக்கும் விரதமிருந்து செல்லும் வழக்கம் உருவாகியுள்ளது. மேலும் பழங்குடி மக்களின் தெய்வங்களுக்கு அதிகமான சக்தி இருப்பதால் சமவெளிப்பகுதி மக்கள் வழிப்பாட்டிற்குப் படையெடுத்து வருவதையும் காணமுடிகிறது.

மலையாளி இனப்பழங்குடி மக்கள் வழிபடும் இடங்களில் கட்டப்பட்ட கோவில் அமைப்புகள் பழங்காலத் தன்மையினை இழந்துள்ளது. தற்போது இத்தகைய கோவில்கள் சில இடங்களில் கட்டப்பட்டுள்ளன. அதற்கு ஆதிக்க சமயங்கள் தங்களது தாக்கத்தை இம்மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது என்பதும் காரணியாகும்.

### 6.16. கல்வியில் மாற்றங்கள்

மலையாளிகள் கூலி வேலைக்கு நகர் புறங்களுக்குச் செல்வதால் அங்குப் படித்து வேலைக்குச் செல்லும் பல்வேறு மக்களைப் பார்க்கின்றனர். எனவே, தங்களைப் போல் தங்கள் பிள்ளைகளும் படிக்காமல் இருந்தால் தாங்கள் செய்யும் கூலி வேலையைத்தான்

அவர்களும் செய்ய நேரிடும் என்று கருதி இம்மக்கள் தங்கள் பிள்ளைகளைக் கூலி வேலை செய்தாவது படிக்க வைக்க வேண்டும் என்று எண்ணுகின்றனர். இதன் காரணமாக மலையாளிகளின் குழந்தைகள் குறைந்தது எழுதப் படிக்க தெரிந்துக்கொள்ளும் தொடக்கக் கல்வி வரைப் பள்ளிக்குச் செல்கின்றனர். சிலர் மட்டுமே மேற்படிப்பையும் தொடருகின்றனர்.

ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட மலைக் கிராமங்களில் 2001-ஆம் ஆண்டின் கணக்கு எடுப்பின்படி 45 கிராமங்களுக்கு ஒரு மேல்நிலைப் பள்ளி மட்டுமே இருந்து. அந்நிலையே இன்றும் நீடிக்கிறது. சில கிராமங்களில் துவக்கப்பள்ளி நடுநிலைப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டுள்ளன. கிராமத்திற்கு இரண்டு மூன்று பேர் கல்லூரி கல்வி கற்க்க நகரங்களுக்குச் சென்று வருகின்றனர். அரசு வேலைக் கிடைப்பது பத்துக் கிராமத்துக்கு ஒருவர் என்று இருந்த நிலை மாறி, இன்று ஒரு பஞ்சாயத்துக்கு உட்பட்ட கிராமங்களுக்கு ஒருவர் என்று உயர்ந்துள்ளது. இங்குள்ள மாணவர்கள் சிலா் பொருளாதார காரணங்களுக்காகவே மேல்படிப்பைத் தொடராமல் பாதியிலே நின்று விடுகின்றனர். பழங்குடி மக்களுக்கு உரிய சலுகைகளை அரசு வழங்கி ஊக்கமளித்தால் இவா்களின் குழந்தைகளும் சமவெளிப் பகுதியில் பயிலும் குழந்தைகளைப்போல் எல்லோறும் பள்ளிக்குச் செல்வார்கள்.

## 6.17. பொருளாதார வளர்ச்சி

மலையாளிகள் தங்களின் மேட்டு நிலங்களில் ஆண்டு முழுவதும் இரவுப் பகல் விழித்திருந்து காட்டு விலங்குகளோடுப் போராடி அரும்பாடுப்பட்டு அறுவடை செய்தாலும் அவற்றின் மதிப்புச் சந்தைக்குச் சென்றால் ஆண்டு ஒன்றுக்கு ரூ.10,000, முதல் ரூ.20,000 மட்டுமே கிடைக்கும் சூழல் இருக்கிறது. இந்தத் தொகை நான்கு அல்லது ஐந்து பேர் கொண்ட குடும்ப வாழ்விற்குப் போதுமானதாக இருப்பதில்லை. இதன் காரணமாகத் தங்களுடைய பொருளாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள பெரும்பான்மைப் பழங்குடி மக்கள் பெருநகரங்களான சென்னை, பெங்களுர், திருப்பூர் போன்ற பல்வேறு இடங்களுக்குச் சென்று கட்டிடம் கட்டும் பணியிலும், பனியன் கம்பெனிகளிலும், ஆழ்க்குழாய்க் கிணறு அமைக்கும் பணிக்கும் செல்கின்றனா். இரவு நேரங்களில் வேலை செய்யும் கட்டிடங்களின் அருகில் உள்ள சாலையோரம் கூடாரம் அமைத்துத் தங்களுடைய வாழ்க்கையை மேம்படுத்தி வருகின்றனர். வோ்வை சிந்தி உழைக்கும் இவா்களின் உழைப்பை சில ஏமாற்றுக்காரா்கள் வாங்கிக் கொண்டு குறைவான கூலியினையே இவா்களுக்கு கொடுக்கின்றனா்.

ஒரு சிலா் கூலி தராமல் ஏமாற்றி விடுவதும் உண்டு. பொங்கல், பண்டிகைக் காலங்கள், அறுவடைக் காலங்களில் மட்டுமே ஊருக்கு வருபவா்களும் உண்டு. மற்ற

நாட்களில் பெரு நகரங்களில் தங்கிக் கடுமையான, ஆபத்தான வேலைகளின் மூலமே தங்களுடைய பொருளாதாரத் தேவையை நிறைவுச் செய்துக் கொள்பவர்களாக இன்றைய மலையாளிகள் இருந்து வருகின்றனர். வனச் சட்டங்களும், வன அழிப்பும், மக்கள் தொகைப் பெருக்கமும் மலையாளி இனப் பழங்குடி மக்கள் மலையை விட்டு வெளியேறுவதற்குக் காரணங்களாகக் கருதப்படுகின்றன.

### 6.18. கூத்தின் இன்றைய நிலை

தெருக்கூத்து வெறும் பொழுதுபோக்குக் கலையாக மட்டுமின்றி கோவில் வழிப்பாட்டின் ஒரு பகுதியாகவும் இருந்து வருகிறது. கூத்தாடும் கலைஞர்கள் ‘கங்கணம்’ (காப்பு) கட்டி விரதமிருந்து ஆடுவதும், கடவுள் வேடங்களை ஏற்று நடிக்கும் கலைஞர்களைக் கடவுளாக எண்ணிப் பார்வையாளர்கள் வணங்குவதும் இவர்களிடத்தில் காணமுடிகின்றன. சில சமயங்களில் இக்கலைஞர்களையே கடவுள் என்று எண்ணி, பிள்ளைவரங்கள், மடிப்பிச்சைப் போன்றவற்றையும், இவர்களிடமிருந்து பெரும் பொருட்கள் தெய்வீக ஆற்றல் பெற்றது என்றும் கருதுகின்றனர். ஆனால் இத்தகைய கலைகளை நிகழ்த்துவதற்கு இன்றைய இளைய தலைமுறையினர் ஈடுபாடு காட்டுவதில்லை. வயது முதிர்ந்த கலைஞர்கள், மற்றும் அதன்பால் ஈடுபாடு கொண்ட சில கலைஞர்கள் மட்டுமே ஆர்வம் செலுத்துகின்றனர்.

மலையாளிகள் தாங்கள் கற்ற அனுபவத்தின் அடிப்படையிலேயே வரும் சந்ததினருக்குக் கற்றுத் தருகின்றனரே தவிர அதனை எழுத்து வடிவில் எழுதிப் பாதுகாக்கப்படவில்லை. இதனைப் பதிவு செய்து வைத்திருந்தால் இக்கலையை மீட்டுருவாக்கம் செய்வதற்கு ஏதுவாக இருக்கும். தங்களது மூதாதையர்கள் பெற்றிருந்த கலைகுறித்த அனுபவத்தைப் பின்வந்த கலைஞர்கள் முழுமையாக வாங்கிக் கொண்டிருப்பார்கள் என்று நாம் கூறுவதற்கு இயலாது. கலைகளை உள்வாங்குகின்ற தன்மையெல்லாம் அதன் மீதுள்ள ஈடுபாட்டைக் குறித்தே அமையும்.

மலையாளிகள் உணவு தேடுவதில் பெரும்பாலான காலத்தைச் செலவிடுவதால், விழாக்களிலும், சடங்குகளிலும் கலை குறித்த ஆர்வம் அவர்களிடம் மேலோங்கி இருக்கின்றது. மீதமுள்ள கால இடைவெளியில் உற்பத்தி முறையையும் பொருள் சேர்ப்பதையுமே முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதுகின்றனர். கூத்து முழு நேரத் தொழிலாக ஆக்கப்படாத சூழலில் இந்த அளவில்தான் அதனுடைய நிலைப்பாடும் இருக்கும்.

## 6.19. சமூக அமைப்பில் மாற்றம்

குழுக்களாக வாழ்ந்த இப்பழங்குடிகள் தற்போது தனித்தனிக் குடும்பங்களாகப் பிரிந்துள்ளனர். குழு வாழ்வில் பகிர்தல் மேலோங்கியிருந்தது. ஆனால், இன்று தமது குடும்பம், தமது குழந்தைகள் என்னும் குறுகிய வட்டத்திற்குள் சுழலும் நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர். முன்பு தங்களுக்குள் ஏற்படும் பிரச்சனைகளை 'ஊர்க்கவுண்டர்', மூலமே முடித்துக் கொள்வர். அவரால் தீர்க்க முடியாத பிரச்சனையாக இருந்தால் நாட்டாரிடம் கொண்டு செல்லப்படும். இன்று தங்களுடைய ஊர் கட்டுப்பாட்டிற்குத் தீர்வு காணாதப் பிரச்சனைகளைக் காவல் துறையிடம் ஒப்படைத்து விடுகின்றனர்.

முன்னர் பிரச்சனைகளுக்குத் தண்டனையாக விதிக்கப்படும் குற்றபணம் முழுவதும் பாதிக்கப்பட்டவர்களுக்கும், ஊர் நிர்வாகிகளுக்கும் போய்ச் சேர்ந்தது. ஆனால் இன்று தண்டப்பணம் முழுவதும் ஊரில் பொதுவாகக் கொண்டாடப்படும் திருவிழாச் செலவிற்கும், கோயில் கட்டுமானப் பணிக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு பஞ்சாயத்துக்கு உட்பட்ட கிராமங்களில் எழும் பிரச்சனைகளுக்கு இன்று பஞ்சாயத்துத் தலைவர்கள் முன்னிலையில் வழக்குகள் விவாதிக்கப்படுகின்றன. கிராம பஞ்சாயத்துக்குக் கட்டுப்படாத வழக்குகள் காவல் துறையிடம் ஒப்படைக்கப்படுகிறது. மலையாளிகளிடையே நவீன கால வளர்ச்சியின் தாக்கங்கள் இருந்தாலும் அவற்றையும் தங்களுடைய மரபு சார்ந்தே அணுகுகின்றனர்.

## 6.20. மருத்துவ முறைகளில் மாற்றம்

காடுகளில் இருந்து மூலிகை மருந்துகளை எடுத்துப் பயன்படுத்தி வந்த மலையாளிகள் இன்று ஆங்கில மருந்துகளை நாடிச் செல்கின்றனர். இதற்குக் காரணம் மூலிகை மருந்துகள் குறித்த அறிவு இம்மக்களிடையே குறைந்து கொண்டே வருவதாகும். சில கொடிய நோய்களுக்கும் பொருளாதாரப் பற்றாக்குறையினால் சரியான மருந்துவம் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றனர்.

பாட்டி வைத்தியம் மூலம் பிரசவம் பார்த்த இவ்வினப் பெண்கள் இன்று அரசுதரும் உதவித்தொகைக்காக மருத்துவமனைக்குப் பதினைந்து முதல் இருபது கிலோமீட்டர் தொலைவு வரை நடந்து செல்கின்றனர். பல கிராமங்களுக்குச் சரியான தார்ச் சாலை இல்லாததால் போக்குவரத்து வாகனங்கள் வருவதில்லை. இதனால் 5 முதல் 10 கிலோ மீட்டர் வரை நடந்து சென்றே பேருந்துகளைப் பிடிக்க வேண்டிய சூழல் உள்ளது. சிலருக்கு மருத்துவமனைக்குப் போகும் வழியிலேயும் குழந்தைகள் பிறந்து விடுவது உண்டு.

மேல்மலையில் அமைந்துள்ள புதூர் என்கிற கிராமத்தில் ஒரு ஆரம்ப சுகாதர நிலையம் மட்டுமே உள்ளது. ஆனால் மருத்துவர்கள் சரியாக வருவதில்லை. இங்குள்ள 32 கிராமங்களைச் சேர்ந்தவர்கள் மருத்துவம் பார்க்க வேண்டுமென்றால் 35 கி.மீ. தொலைவில் சமவெளிப்பகுதகியான திருப்பத்தூருக்குச் செல்ல வேண்டிய நிலை இருந்து வருகின்றது. எனவே இக்கிராம மக்களுக்குப் போதிய மருத்துவ வசதிகளை அரசு செய்து கொடுத்தால் இவர்களுடைய உயிரினைக் காக்க பேருதவியாக இருக்கும் என்பது இம்மக்களின் எதிர்பார்ப்பாகும்.

### 6.21. பொழுது போக்குகளில் மாற்றங்கள்

சில வருடங்களுக்கு முன்புவரை காடுகளில் சுற்றித்திரிந்து தேன், கிழங்குகள், கீரைகள், விறகுகள், பழங்கள் சேகரிப்பதும் இரவு நேரங்களில் தீமூட்டி அதனைச் சுற்றிப் பெண்களும், ஆண்களும் இசையுடன் பாடி ஆடுவதும், கதைகள் சொல்வதும் இவர்களது பொழுதுப்போக்காக இருந்தன. இந்நிலை மாறி, காலையில் கஞ்சியுடன் காட்டு வேலைகளில் ஈடுபடுபவர்கள் மாலையில்தான் வீடு திரும்புகின்றனர். பின்னர் இரவு வேலையில் சமைத்து உண்டு உறங்குவதற்குத்தான் இவர்களுக்கு நேரம் இருக்கின்றது. இதன் காரணமாக இவர்களது பொழுது போக்குகள் சில மாற்றங்களுக்கு உட்பட்டு வருகின்றன.

மலையாளி இனப் பழங்குடி இளைஞர்கள் சிலர் காடுகளில் விளையும் மா, பலா, வாழை போன்றவற்றைச் சமவெளிப்பகுதியில் விற்று விட்டுச் சினிமாக் கொட்டகைக்குச் சென்று சினிமாப் பார்ப்பது, வீடியோ வாடகைக்கு எடுத்துத் திரைப்படம் பார்ப்பது, வானொலி கேட்பது, ஒலி நாடாப் பெட்டிகள் மூலம் திரைப்படப் பாடல்கள் கேட்பது, போன்றவையே இன்றைய இளைஞர்களின் முழுநேரப் பொழுதுபோக்குகள் ஆகும். இந்த வகையானப் பொழுதுப் போக்குகள் இம்மக்களின் பழமையான பண்பாட்டை அழிப்பதோடு ஆதிக்க வா்க்கத்தின் நுகா்வுக் கலாச்சாரத்தையும் புகுத்துகின்றன. மலையாளிகளின் மதிப்பீடுகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. இளைஞர்கள் மட்டைபந்து, கபடி, கைப்பந்து போன்ற விளையாட்டுகளில் தங்களுடைய பொழுதினை கழிக்கின்றனா்.

### 6.22. இன்றைய வாழ்வியல் மாற்றங்கள்

அரசு கொடுத்த இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியைக் இன்று பெரும்பாலான மலையாளிகளின் வீடுகளில் காணமுடிகின்றன. வானொலிப் பெட்டியும் இருப்பதால் உலக நடப்புக்களை ஓரளவு தெரிந்தவா்களாக இருந்து வருகிறார்கள். அதுமட்டுமல்லாமல் பலரும் கைபேசியின் உதவிகொண்டு பலரிடமும் எளிதாகத் தொடர்பு

கொள்ளும் வசதியினைப் பெற்றிருக்கின்றனர். எனவே, இத்தகைய ஊடகங்களின் வரவு மலையாளிகளின் இளையத் தலைமுறையினரிடையே நல்ல மாற்றங்களை ஏற்படுத்தி வருக்கின்றன.

மலையாளிகளிடம் திரைப்படத்தின் பாதிப்பும் அதிகமாகக் காணப்படுகின்றது. மூத்த தலைமுறையினருடைய பெயர்கள், குலதெய்வப் பெயர்களாகவும், தமிழ்ப் பெயர்களாகவும் இருக்க இன்றைய சிறுவர், சிறுமியர்களின் பெயர்கள் திரைப்பட நடிகர், நடிகைகளின் பெயர்களாக மாறிவருகின்றன. கல்வி என்பது இன்றைய தலைமுறையினருக்குப் பெறும் வாய்ப்பாகக் கிடைத்திருக்கின்றது. ஆனால் கல்வி கற்பதற்கு இன்றைய தலைமுறையினரும் கூட ஆர்வம் கொள்ளாதச் சூழலே நிலவுகின்றது. சிறுவர் சிறுமியர்கள் எட்டாம் வகுப்புக்கு மேல் படிப்பதற்கு ஆர்வம் கொள்வதில்லை. ஆரம்பக் கல்வி நிலையங்கள் மட்டும் உள்ள ஊர்களில் குழந்தைகள் ஆரம்பக் கல்வியோடு தங்கள் படிப்பை நிறுத்திக் கொள்கின்றனர். உயர்நிலைப் பள்ளிக் கல்வியை வெளியில் சென்று உயர்க் கல்வி கற்றவர்கள் மிகக் குறைவாகவே இருப்பதை களஆய்வில் காணமுடிந்தது.

## 6.23. பெண்களின் நிலையில் மாற்றம்

மலையாளிப் இனப் பெண்களை மற்ற பெண்களோடு ஒப்பிடும் பொழுது பலவகைகளில் இவ்வினப் பெண்கள் சுதந்திரம் மிக்கவர்களாகவும் ஆண்களுக்கு நிகராகவும் வாழ்கின்றனர். உலகளவில் பெண்கள் இரண்டாம் தரமாக, சமூகப் பொருளாதார நிலையில் ஆண்களுக்குக் குறைவானவர்களாக மதிக்கப்படும் சூழலில் பழங்குடி இனமான மலையாளிகளிடையே பெண்கள் சமமாக நடத்தப்படுவது மிகவும் போற்றப்பட வேண்டிய ஒன்று. இவர்கள் மத்தியில், பிறப்பினால் பெண்கள் ஒதுக்கப்படுவதில்லை. பெண் குழந்தை பிறந்தவுடன் எந்தத் தாயும் வருத்தப்படுவதில்லை. ஆண்குழந்தைகளை ஏற்றுக்கொள்வதைப் போன்றே பெண் குழந்தைகளையும் ஏற்றுக்கொள்கின்றனா். எந்தக் குழந்தையானாலும் அது இறைவனின் கொடையாகவே காண்கின்றனர். பெற்றோர்கள் குழந்தைகளை வளர்பதிலும் ஆண், பெண் என்ற எந்தவிதப் பாரபட்சமும் காண்பிப்பதில்லை. படிப்பதற்கு இருவரையும் பள்ளிக்கு அனுப்புகின்றனர். திருமணத்தில் பெண்ணின் சம்மதம் கேட்ட பின்பே ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. திருமண முறிவிலும் பெண்ணுக்குச் சம உரிமை உண்டு.

பெண் திருமணம் செய்து கொண்ட கணவரோடு, வாழ முடியாத சூழ்நிலையில் கணவனுடன் திருமண பந்தத்தை முரித்துக் கொள்ளவும். வேறு ஒருவரை மணந்து கொள்ளவும், பெண்ணுக்கு உரிமை உண்டு. மணமுறிவு பெற்ற பெண்கள் மறுமணம் செய்வதையும், கணவனை இழந்தவர்கள் மீண்டும் திருமணம் செய்து கொள்வதையும் பழங்குடியினர் எதிர்ப்பதில்லை. குடும்ப வேலைகளை முழுக்க முழுக்க பெண்களே

செய்கின்றனர். ஆண்கள் அவர்களுக்கு உதவியாக இருக்கின்றனர். பொறுப்புகளிலும் முடிவுகள் எடுப்பதிலும் பெண்களுக்கும் சமப்பங்குண்டு. ஊர்க்கூட்டம், பஞ்சாயத்து போன்றவற்றில் பாதிக்கப்பட்ட பெண்கள் முழு அளவில் பங்கெடுக்கின்றனர். திருவிழாக் கொண்டாட்டங்கள், திருமணம் விழாப் போன்றவற்றில் பெண்களின் பங்கெடுப்புப் பாராட்டப்படும் விதமாக இருக்கின்றது.

ஆதிக்கக் கலாச்சாரத்தின் ஓர் அம்சமாகிய பெண்ணடிமைத்தனம் தற்போது இம்மக்களிடையேயும் கொஞ்சம் கொஞ்சமாகப் புகுந்து வருகிறது. பெண்களைக் குறைத்து எடைப்போடும் போக்கு அதிகரித்துள்ளது. பிறப்பிலும், வளர்ப்பிலும் திருமணங்களிலும் பெண்கள் அடிமைப் படுத்தப்படும் நிலை புகுந்துள்ளது. திருமணத்தில் விரும்பியவர்கள் சேர்ந்து வாழும் நிலை மாறி பெற்றோர்கள் பேசித் தீர்மானிக்கும் திருமணங்களே சிறப்புடையனவாகக் கருதப்படும் நிலை உருவாகி வருகிறது.

பெண் பிள்ளைகள் புகுந்த வீட்டு வாரிசுகளைச் சுமப்பவர்கள் என்பதால் அவர்களைக் குறிப்பிட்டப் பருவம் அடைந்தவுடன் மேற்படிப்பைத் தொடர முடியாமல் பாதியிலே நிறுத்தி விடுகின்றனர். ஏதேனும் நல்ல வரன்கள் வந்தால் அவர்களிடத்திலே பிடித்துக் கொடுத்து விட வேண்டும் என்றே விரும்புகின்றனர். இதற்குக் காரணம், படிப்பு என்ற போர்வையில் பிற இனத்தவர்களுடன் காதல் வயப்பட்டு ஓடிவிடுவார்கள் என்ற அச்சமே ஆகும். அவ்வாறு செல்பவர்களை இவர்கள் தங்கள் இனத்தில் சேர்த்துக் கொள்வதில்லை. அக்குடும்பத்தாரும் இதனை ஒரு சமூக இழிவாகவே கருதுகின்றனர்.

### 6.24. இளைஞர்களிடையே ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

மலையாளி இன இளைஞர்கள் ஓர் அளவுக்கு எழுதப் படிக்க கற்றிருப்பதால் பலமயில் தூரம் சென்று வேலை தேடுகின்றனர். வேலைக்குச் செல்லும் இடங்களில் அங்கிருக்கும் பிற இனமக்களுடன் தொடர்பு ஏற்படுகின்றது. அவர்களைப் போலவே உடையணிய வேண்டும். அவர்களைப் போலவே சம்பாதித்து இரசக்கர வாகனம் வாங்க வேண்டும் என்று எண்ணுகின்றனர். சிலர் சம்பாதித்து வாகனங்கள் வாங்கி பயன்படுத்தியும் வருகின்றனர்.

மலையாளி இனப் பழங்குடி இளைஞர்கள் தங்கள் சகோதர, சகோதரிகளையும் கல்வி கற்க உதவி செய்கின்றனர். சமவெளிப் பகுதி மக்கள் அணிவது போன்ற ஆடை, அணிகலண்களை வாங்கித்தருவது, தங்களுடைய குடும்ப பொருளாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள உதவுவது, போன்றவற்றை வரவேற்கின்றனர். விழாக்காலங்களில் சமவெளிப் பகுதி மக்களைப் போன்று விளையாட்டுப் போட்டிகள், நடத்துவது, அதில்

பங்கேற்பது தங்களுடைய சமூக முன்னேற்றத்திற்கு உழைப்பது எனப் பல்வேறு வகையில் வளர்ச்சி அடைந்துள்ளனர். கல்லூரி மேற்படிப்பு வரை படித்து முடித்து விட்டு அரசு வேலைகளிலும், தனியார் நிறுவனங்களிலும் சிலா் பணிப்புரிந்து வருகின்றனர். ஒரு சிலர் வெளிநாடு சென்று நான்கு, ஐந்தாண்டுகள் அங்கேயே தங்கி சம்பாதித்துப் பின்னர் மலைக்குவந்து அடுக்குமாடி குடியிருப்புகளைக் கட்டி குடும்பத்தாருடன் வாழ்வதையும் காணமுடிகிறது.

## 6.25. புழங்குப் பொருட்களின் இன்றைய நிலைகள்

சவ்வாது மலை மலையாளி இனப் பழங்குடி மக்களின் புழங்குப் பொருட்கள் பலவும், இன்றைய உலகமயமாதல் சூழ்நிலையில் பல மாற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்டிருப்பினும் அவை மரபுகளின் அடிப்படையிலே நிகழ்ந்துக் கொண்டிருக்கின்றன. சுரைக் குடுவைகளும், புனாய்களும் இன்று வெறும் காட்சிப் பொருளாக மாறத் துவங்கிவிட்டன. பிளாஸ்டிக் பொருட்கள் அந்த இடங்களை நிரப்பி வருகின்றன. கொங்காடைகள் பிளாஸ்டிக் பொருட்களாகவும், குடைகளாகவும் மாறிவிட்டன. பனையோலைகளாலும், தென்னோலைகளாலும் பின்னப்பட்ட பாய்கள், இன்று உடல் சூட்டை விலை கொடுத்து வாங்கும் பிளாஸ்டிக் பாய்களாக மாறிவிட்டன.

கலைநயத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கிய பேழைகள் மறைந்து விட்டன. மரப் பெட்டிகள் மாறி, தகரப் பீரோக்கள் உபயோகத்திற்கு வந்துவிட்டன. நவீன வசதிகள் நிறைந்த கிராமங்களுக்கு அருகில் உள்ள குடியிருப்புகளில் வாழும் மலையாளிகள் பலரும் மின் அரவை ஆலைகளுக்கு வரத் தொடங்கிவிட்டார்கள். நெல் மற்றும் பிற தானியங்கள் இந்த மின் அரவை ஆலைகளில் அரிசியாகவும், மாவாகவும் மாற்றம் பெறுகின்றன. எனவே, இங்கு ‘உரல்’ மற்றும் அரைக்கற்களின் தேவை குறைந்து விட்டது. மலையாளிகளும் பிற இன மக்களைப் போலவே உடல்நலத்திற்கு ஏற்ற நிலையிலுள்ள கைக்குத்தலரிசியை மறக்க ஆரம்பித்து விட்டார்கள். நவீனவசதி கொண்ட கிராமங்களிலிருந்து தொலைவிலிருக்கும் பகுதிகளில் வாழும் மலையாளிகள் மட்டும் இன்றும் கைக்குத்தலரிசி முறையையும், அரைக்கற்கள் முறையையும் கடைபிடித்து வருகின்றனர்.

மண்பாண்டங்களாக இருந்த சட்டி, பானை, தச்சுப்பு, குழம்புச் சட்டி, நீர்சேமிக்கும் பானை, அகப்பை, மொழவை, தோசைக் கல் போன்றவைகள் இன்று அலுமினியம் மற்றும் நித்தில வெள்ளிப் பாத்திரங்களாகவும், பிளாஸ்டிக் பாத்திரங்களாகவும் மாறி உடலுக்குத் தீங்கை விளைவித்துக் கொண்டிருக்கின்றன.

## 6.26. தொகுப்புரை

- ❖ ஆரம்பக் காலங்களில் காடுகளையும் வன வளங்களையும் சுதந்திரமாகப் பயன்படுத்தி வந்தப் பழங்குடிகள் வனச்சட்டங்கள் கொண்டுவரப்பட்டப் பிறகு ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்புக்குள் ஒடுக்கப்பட்டுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.
- ❖ மலையாளிகளின் முக்கியத் தலைமை பதவிகளான நாட்டார், ஊர்க்கவுண்டர் பதவிகளின் பதிலிகளாக இன்று பஞ்சாயத்துத் தலைவர்களும், சேர்மன், கிராம நிர்வாக அலுவலர்களும் பெற்றுள்ளனர் என்பதை அறியமுடிகிறது.
- ❖ வெள்ளாளக் கவுண்டர்கள் ஒருபுறம் இனக்குலத் தன்மையையும் மற்றொரு புறம் வேளாண்சமூகத் தன்மையையும் பெற்றிருக்கும் அதே வேளையில், நவினமயமாதல் என்ற செயற்பாட்டில் மிக வேகமாக ஈடுபட்டுள்ளனர் என்பதை உணர முடிகிறது.
- ❖ இயற்கையான முறையில் விளைந்த சத்தான உணவுப்பொருட்களை உண்டு வாழ்ந்த மலையாளிகள் இன்று தங்களின் நிலங்களில் விளையும் பொருட்களை வார சந்தைகளில் விற்றுவிட்டு, கூட்டுறவுக் கடைகளில் மலிவு விலையில் கிடைக்கும் அரிசியை உண்டு பல்வேறு நோய்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர் என்பதை அறியமுடிகிறது.
- ❖ பாரம்பரியமான ஆடை, அணிகலன்களை அணிந்திருந்த மக்கள் இன்று நகர்புற மக்கள் அணியும் ஆடை அணிகலன்களை அணியத் தொடங்கிவிட்டனர் என்பதை அறிந்துக்கொள்ள முடிகிறது.
- ❖ திணைப் பயிர்களை பயிரிட்டு வந்த இவர்கள் பருவமழை சரியாக பொய்காமல் போனதால் ஓர் ஆண்டுப்பயிரான மரவள்ளிக் கிழங்கை அதிகமாகப் பயிரிட்டு வருகின்றனர் என்பதை களப்பணியின் போது காணமுடிந்தது.
- ❖ வேலைத் தேடி நகர்புறங்களை நாடிச்செல்லும் மலை கிராம இளைஞர்களின் அறியாமையைப் பயன்படுத்தி செம்மரக் கடத்தல் கும்பல் கடத்தல் வேலைக்கு பயன்படுத்தி வருகின்றன என்பதை களப்பனியின் மூலம் அறிந்துக்கொள்ள முடிந்தது.
- ❖ மலைப் பகுதிகளின் பெரும்பாலான கிராமங்களுக்கு மண் சாலைகள் போடப்பட்டுப் பேருந்துக்கள் இயக்கப்படுவதால் எளிதாக இவர்கள் சமவெளிப்பகுதியில் உள்ள திருவண்ணாமலை, செங்கம், வேலூர், திருப்பத்தூர் ஆகியப் பகுதிகளுக்கு அடிக்கடி சென்று திரும்பும் வகையில் உள்ளனர். இதனால் நகர்சார் பண்பாட்டின் கூறுகள் பலவற்றை உள்வாங்கிக் கொண்டுள்ளனர்.

- ஆண்கள் பெரும்பாலும் கோமணம், கம்பளி, தலைப்பாகை என்று அணியும் நிலை மாறி இன்று பெரியவர்கள் அனைவரும் வேஷ்டி, சட்டையும் இளைஞர்கள் பேண்டு, டீசட்டு உடுத்தும் நிலைக்கு  வளர்ச்சியடைந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.
- வீட்டிற்கு வீடு வானொலி, தொலைக்காட்சிகள் எனப் பண்பாட்டு மாற்றங்கள் நிகழ்ந்துக்கொண்டு இருப்பதை அறியமுடிகின்றன.
- மலையாளிகளின் பண்பாட்டில் சமவெளிப்பகுதிகளின் சமயத் தாக்கம் இடம் பெறுகின்றது. குறிப்பாக வைதீக கடவுள்களின் பெயர்களில் புதிதாகக் கோயில்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதுபோன்ற பல காரணிகளை வைத்துக்காணும்போது வெள்ளாளக் கவுண்டர் சமூகம் விரைவாக நவீனமையமாக்கிக் கொண்டிருக்கின்றது என்பது புலனாகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. சே.சே. ஜான் கென்னடி, கோடைமலைப் பழங்குடியினா், ப.20.
2. இரா. மனோகரன், நாட்டுப்புற வேளாண்மை, ப.205.
3. மேலது, ப.22.
4. பக்தவத்சல பாரதி, தமிழகப் பழங்குடிகள், ப.165.
5. சே.சே. ஜான் கென்னடி, கோடைமலைப் பழங்குடிகள், ப.23.
6. அண்ணாமலை, வனக்குழுத் தலைவா், மேல்பட்டு.
7. http: //ta.wikipedia.org, Monday, Augut 19. 2015.
8. நாராயனசாமி, வனபாதுகாவலா், செங்கம்.